மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்

முன்னிலை திரு.M.சிவராஜேஷ், B.B.A.L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.2/2025

in

அ.வ எண்.45/2024

சேர்மதுரை ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. ஞானம் (இறப்பு) ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. மாரிமுத்து ... எதிர்மனுதாரர்/இறந்துபோன பிரதிவாதியின் வாரிசு

இம்மனுவானது 13.11.2025 இன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராஜன் சுபாசிஸ் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மரிய பிரேம்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

இம்மனுவானது தாவா வழக்குரையை இதனடியில் கண்டபடி சீர்திருத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:-**

2.1 தாவா வழக்கில் காலம் சென்ற 1ம் பிரதிவாதியின் வாரிசான 2ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் வாரிசுகளாக சேர்க்க சமூகம் நீதிமன்றத்தில் மனு செய்து அம்மனு இ.ம.எண்.316/2025 ஆக சமூகம் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.11.19 17:31:10 +0530

3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிருரை இல்லை என்றும் நீதிமன்றம் நீதியின்பால் முடிவு செய்யலாம் என்று மேலெழுத்து செய்யப்பட்டது.

4. இம்மனுவில் தீர்மானிக்க படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

மனுவானது தாவா வழக்குரையை இதனடியில் கண்டபடி சீர்திருத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாவா வழக்கில் காலம் சென்ற 1ம் பிரதிவாதியின் வாரிசான 2ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் வாரிசுகளாக சேர்க்க சமூகம் நீதிமன்றத்தில் மனு செய்து அம்மனு இ.ம.எண்.316/2025 ஆக சமூகம் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுதாரரின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.11.19 17:42:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.11.19 17:43:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தான்குளம்.
இ.ம.எண்.02/2025இன்
அ.வ.எண்.45/2024
நேரிய/வரைவுஉத்தரவு
நாள் 19.11.2025